| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட நீர் வடிகட்டி உபகரணத்துடன் கூடிய கட்டிடத்தின் பெறுமதி (Ro-filter) ரூபா 1,344,000 மற்றும் 2010 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாண சபையிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 640,300 மதிப்பீட்டுக் கிரயமான அரிசியுடன் அண்மித்த பேக்கரி உபகரண உருப்படிகள் 15 இன் பெறுமதி நிதிக் கூற்றுக்ககளில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்ககளில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கிராமிய பாலம் செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 04 பாலங்களின் பெறுமதியான ரூபா 152,580,000 நிதிக் கூற்றுக்ககளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பாலங்களின் பெறுமதியை எழுத்து மூலம் உறுதி செய்து கொண்டதன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் | கையளிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 09 கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளுக்குரிய ரூபா 220,480 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | மீளாய்வாண்டின் செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா அபிவிருத்தி சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹொட்டெல், ஒன்றிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 3,332,341 ஆன வரித் தொகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டமையால் சபையினால் 2020 திசெம்பர் 12 ஆம் திகதி வழக்கு தொடரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்ல | ஏற்றுக்கொள்கின்றேன். | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட வேண்டும். |

